
பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 17 | திங்கட்கிழமை | 04.12.2023 | அதிர்வு 125

## காலநிலை மாற்றம் குறித்த சர்வதேச பல்கலைக்கழகம்

### ரணில் உத்தியோகபூர்வ அறிவிப்பு



காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தின் திட்டத்தை நேற்று டுபாயில் நடைபெற்ற ஐக்கிய 05

# ரணிலைத் தோற்கடிக்க துணைபோக மாட்டோம்

## மொட்டுவின் முக்கியஸ்தர் அமைச்சர் பிரசன்ன உறுதி



(கே.பாரதி)

“எந்தச் சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடிக்க நாங்கள் ஆதரவு வழங்க மாட்டோம். பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்த பெருந்தலைவராகவே நாங்கள் ரணில் விக்கிரமசிங்கவைப் பார்க்கின்றோம்.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். 05

# பொலிஸின் கொலை வெறியாட்டத்துக்கு முடிவுகட்ட அனைவரும் அணிதிரள்வோம்

## வட்டுக்கோட்டைப் போராட்டத்தில் கஜேந்திரன் எம்.பி. சூளுரை



(எஸ்.நிதர்ஷன்)

“தமிழ் மக்களுடைய அடிப்படை உரிமைகளை மறுப்பதும், தமிழ் மக்களுக்கு எதிராகக் காட்டுச் சட்டங்களைப் பயன்படுத்துவதும், தமிழர்கள் மீது ஈவிரக்கம் இல்லாத தாக்குதல்கள், சித்திரவதைகளை நடத்துவதும் பொலிஸாரின் வழமையான நடவடிக்கையாக இருக்கின்றது. ஆகவே, 06

## நஞ்சருந்தி உயிர்மாய்க்க முயற்சித்த தாய் சாவு; மகள் வைத்தியசாலையில்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலையூற்றுப் பகுதியில் நஞ்சருந்தி தற்கொலைக்கு முயற்சித்த குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அவரின் மகள் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவத்தில் பாலையூற்றுப் பகுதியைச் சேர்ந்த கே.கவிதா (வயது 47) என்ற குடும்பப் 05

## முதலை தாக்கி ஒருவர் மரணம்



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை – தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிப்பித்திடல் பகுதியில் 05

## வடக்கு மாகாண பேரவை செயலராக சிறி நியமனம்



வடக்கு மாகாண சபையின் பேரவைச் செயலாளராக ஆழ்வாப்பிள்ளை சிறி நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய ஆ.சிறி, இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்துக்குத் தேர்வான நிலையில், வடக்கு மாகாண சபைக்கு மாற்றலாகினார்.

இவ்வாறு வடக்கு மாகாண சபைக்கு 05




சபாஷ்! சரியான போட்டி!

இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர் தெரிவு பற்றிய விவகாரத்தைத்தான் சொன்னேன்.

இரண்டு பேருக்கு இடையில் – சிறிதரன், சுமந்திரன் எம்.பிக்களுக்கு இடையில் – நேரடிப் போட்டி என்று பார்த்தால், இப்போது மூன்றாவது நபராக கிழக்கில் இருந்து ஒருவர் சத்தம் சந்தடி இன்றி – ஆரவாரம் காட்டாமல் – கடைசி நேரத்தில் 03

# இடைக்கால ஜனாதிபதியான ரணிலுக்கு தன்னிஷ்டப்படி செயற்பட அதிகாரமில்லை

## இப்படிக் கூறுகின்றார் முஜிபுர் ரஹ்மான்

"மக்கள் ஆணையற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தையோ நீதிமன்றத்தையோ மதிப்பதில்லை. அரசமைப்புப் பேரவைக்கு அழுத்தம் பிரயோகிக்கின்றார். இடைக்கால ஜனாதிபதியொருவருக்கு இவ்வாறு தன்னிச்சையாக செயற்பட அதிகாரம் இல்லை."

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"எதிர்காலத் திட்டமிடல் அற்ற வரவு – செலவு திட்டமே முன்வைக்கப்பட்டுள்ளது. ஜனவரி முதல் மேலும் சில வரிகளை அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகவுள்ளது. அவை வரவு – செலவு திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. ஒருபுறம் அரச உத்தியோகத்தர்களுக்கான வாழ்வாதாரக் கொடுப்பனவை வழங்குவதாகக் கூறிக் கொண்டு, மறுபுறம் வட் வரியை 18 சதவீதமாக அதிகரித்துள்ளனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உலகம் சுற்றிக் கொண்டிருக்கும் போது, நாட்டில் நாளுக்கு நாள் பிரச்சினைகள் அதிகரித்துச் செல்கின்றன.

அரசமைப்பு பேரவை சார் செயற்பாடுகளில் சபாநாயகர் பக்கச் சார்பாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். நாடாளுமன்றத்தில் கூட நியாயம் நிலைநாட்டப்படாத போது, நாட்டில் எவ்வாறு மக்களுக்கு நியாயம் வழங்கப்படும்? ஜனாதிபதியும், ஜனாதிபதியின் சகாக்களும் நாடாளுமன்றத்தையோ சட்டத்துறையையோ மதிப்பதில்லை. விக்கிரமசிங்க – ராஜபக்ஷ ஆட்சி மக்கள் மத்தியில் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியுள்ளது.




உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பான வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலும் பொதுத் தேர்தலும் இடம்பெறும் என்று ஜனாதிபதி அறிவிக்கின்றார். ஜனாதிபதி பதவிக்கு அப்பால் தேர்தல் ஆணையாளராகவும் அவர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். தேர்தல் தொடர்பில் அறிவிக்கும் உரிமை ஜனாதிபதிக்குக் கிடையாது." – என்றார்.

# மாவீரர் தின அனுஷ்டிப்பை எதிர்த்து கிளிநொச்சியில் வழிமறிப்புப் போர்!

## கிளிநொச்சி வளாக மாணவர்களின் பெயரில் அநாமதேய அமைப்பு ஒன்று திடீர் அறிவிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் மாவீரர் தின நிகழ்வுகளில் பங்கேற்ற மாணவர்களையும் அதற்கு அனுமதி வழங்கிய பீடாதிபதிகளையும் தண்டிக்க வலியுறுத்தி திடீரென முளைத்த கிளிநொச்சி வளாக மாணவர் ஒன்றியம் என்ற அநாமதேய அமைப்பு எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை ஏ9 வீதியை மறித்துக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதற்கான முன்னறிவித்தல் நேற்றிரவு கிளிநொச்சி வளாகத்தினுள் அடங்கும் சகல பீடங்களினது பீடாதிபதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 26ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த நாளையும், மறுநாள் 27 ஆம் திகதி அந்த அமைப்பிலிருந்து உயிர்நீத்தவர்களின் நினைவு தினத்தையும் கடைப்பிடித்தமையும் கிளிநொச்சி வளாகத்தில் அமைதியின்மையை ஏற்படுத்துவதோடு இன முரண்பாடுகளை தோற்றுவிக்கும் என சிங்கள மாணவர்கள் சிலர் கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவருக்கு அநாமதேயமாக முறைப்பாடுகளை செய்திருந்தனர்.

இத்தகைய அநாமதேய முறைப்பாடுகள் பல வெவ்வேறு பெயர்களில் அனுப்பப்பட்டதன் பின்னணியில் கிளிநொச்சி வளாக விரிவுரையாளர் ஒருவர் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இதுவரை இயங்காத – பதிவு செய்யப்படாத – கிளிநொச்சி வளாக மாணவர் ஒன்றியம் என்ற பெயரில் பீடாதிபதிகளுக்குக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்திலேயே மாவீரர் நாள் நிகழ்வுகளில் பங்குபற்றிய மாணவர்களையும் அந்த நிகழ்வுக்கு அனுமதி வழங்கியதாகக் கூறப்படும் விவசாய பீடாதிபதியையும் உரிய விசாரணைகள் முடிவுறும் வரையும் உள்நுழைவுத் தடை விதித்து, இடைநிறுத்தி வைக்குமாறும், இன முரண்பாட்டை தோற்றுவிக்கும் இத்தகைய நிகழ்வுகளை கண்டும் காணாமல் இருந்த பொறியியல் பீட பீடாதிபதி, தொழில்நுட்ப பீட பீடாதிபதி ஆகியோரையும் பதவி விலகவேண்டும் என வலியுறுத்தியும் மேலும் சில விடயங்களை முன்வைத்தும் எதிர்வரும் 7ஆம் திகதி ஏ9 வீதியை முடக்கிப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், நாளை 5ஆம் திகதிக்குள் நிகழ்வுகளில் ஈடுபட்ட மாணவர்களையும், விவசாய பீடாதிபதியையும் உள்நுழைவுத் தடை மூலம் இடைநிறுத்தி விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் எனவும் நாளை மறுதினம் 6ஆம் திகதிக்குள் தமக்குச் சாதகமான பதில் வழங்காது விடின் கிளிநொச்சி பொலிஸாரின் உதவியுடன் நீதிமன்ற கட்டளையை ஒன்றைப் பெற்று ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டு 7ஆம் திகதி திட்டமிட்டபடி போராட்டத்தை முன்னெடுப்போம் என்றும் அந்த அநாமதேய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம் – அறிவியல் நகரில் அமைந்துள்ள கிளிநொச்சி வளாகத்தில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் மற்றும் பயங்கரவாதத்தை மீளுருவாக்கம் செய்யும் செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் தாம் கலந்துரையாடி இருப்பதாகவும், வழக்குகளில் முன்னிலையாகி தமக்குத் தேவையான சட்ட ஒத்துழைப்பை வழங்குவதற்குச் சட்டத்தரணிகள் சம்மதித்திருப்பதாகவும், கொழும்பு உட்பட இலங்கையின் ஏனைய நகரங்களில் இது தொடர்பில் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், மாணவர்களின் உரிமைகள் மறுக்கப்படுவது குறித்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சங்கங்களின் சம்மேளனத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'ரேஸ்'க்குள்' வந்து குதித்திருக்கின்றார்.

இரண்டு தடவைகள் மட்டக்களப்பில் இருந்து நாடாளு மன்றத்துக்கு தெரிவாகி, இம்முறை அந்த வாய்ப்பைக் கோட்டை விட்ட சீனித்தம்பி யோகேஸ்வரன்தான் அவர். சைவ சமயாசார சீலர்.

அவர் அம்சடக்காகப் போட்டிக்குள் நுழைந்த விதம்தான் சந்தேகத்தைக் கிளப்புகின்றது.

இரண்டு தினங்களுக்கு முன்னரே கிழக்கில் முக்கிய செய்தியாளர் சஷி புண்ணியமூர்த்தி தமது முகப்புத்தகத்தில் இது குறித்து விவரம் பதிந்திருந்தார்.

அந்தத் தகவலை முதலில் அப்படியே தருகிறேன்:–

*தமிழரசு தலைமை பதவிக்கு மும்முனைப் போட்டியா?*

*தமிழரசு கட்சியின் தலைமை பதவிக்கு மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரனும் போட்டியிட இருந்ததாக தெரிய வருகின்றது.*

*ஆனாலும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் சிறிநேசன் இந்தியாவிற்கு விஜயம் ஒன்று மேற்கொண்டு உள்ளதால் குறித்த தலைமை பதவி போட்டிக்கான காலம் நிறைவடைந்த காரணத்தினால் குறித்த தலைமை பதவி போட்டியிலிருந்து விலக்கியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.*

*சமூக வலைத்தளங்களில் பரவிய குறித்த விடயம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரனிடம் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அவ்வாறான ஒரு நிலைப்பாடு இருந்ததாகவும் முக்கிய உறுப்பினர்கள் இந்தியா சென்ற காரணத்தால் போட்டித் தேர்வுக்கான காலம் நிறைவடைந்த நிலையில் போட்டியிடுவது கைவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

– இதுதான் அந்த முகப் புத்தகச் செய்தி. இப்போது புதிய தகவல் வந்திருக்கின்றது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் தேர்தலில் போட்டியிட விரும்புகின்றவர்களின் வேட்பு மனுக்கள் 30–11–2023க்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது மத்திய குழுவின் முடிவு.

முன்னாள் எம்.பி. யோகேஸ்வரன் ஆறு பேரின் பரிந்துரையுடன் கூடிய தமது வேட்பு மனு விண்ணப்பித்தை 30–11–2023 அன்று மட்டக்களப்பில் இருந்து பதிவுத் தபாலில் பதில் பொதுச் செயலாளருக்கு அனுப்பி இருக்கின்றாராம். அதன் பதிவுச் சான்றிதழை வாட்ஸ் அப்பில் அன்றைய தினமே பொதுச் செயலாளருக்கு அவர் அனுப்பினார் என்றும் ஒரு தகவல்.

அப்படியாயின் தலைவர் தேர்தல் போட்டியில் இப்போது மூன்று பேர் உள்ளனர்.

நல்லது.

தமது வேட்புமனுவை யோகேஸ்வரன் சத்தம்சந்தடியின்றி அனுப்பியமை ஏன்? அனுப்பிய பின்னரும் அது குறித்து வெளிப்படுத்தாமல் அமுக்கி வாசிப்பது ஏன்? 'யோகேஸ்வரனைப் போட்டியில் நிறுத்த ஆயத்தப்படுத்தினோம், ஆனால் காலதாமதமானமையால் போட்டியிடும் முடிவை கைவிட்டு உள்ளோம்' என்ற சாரப்பட அரியநேத்திரன் கூறியமை ஏன்? – இவை இப்போதைக்கு விடை தெரியாத வினாக்கள்.

ஆக, இரண்டுங்கெட்டான் மனநிலையில்தான் – போட்டியில் இறங்குவதா அல்லது விடுவதா என்ற எண்ணத்துடன் தான் – களத்தில் யோகேஸ்வரன் இறங்கியுள்ளாரா? அதுவும் தெரியவில்லை.

எது, எப்படி என்றாலும் தேர்தலில் நிற்கும் உரிமை அவருக்கும் உண்டு. மும்முனைப் போட்டியாகத்தான் தேர்தல் நடந்து முடியட்டுமே. அதுவும் நல்லதுதானே. உட்கட்சி ஜனநாயகம் உச்சமாக இருக்கின்றது என்றுதானே அதன் அர்த்தம்!

இதையொட்டி கொசுறு தகவல் ஒன்று.

மன்னாரில் கடந்த வெள்ளிக்கிழமை (முதலாம் திகதி) மாலை ஒரு கூட்டத்தில் பேசிய சுமந்திரன் எம்.பி. "தமிழரசுக் கட்சியில் பலருக்குத் தலைமைப் பதவிக்குத் தகுதி உண்டு. தலைமைப் பதவிக்கு இருவர் மாத்திரம் போட்டியிடவில்லை" என்று அங்கு கூறியிருந்தார். அது அடுத்த நாள் காலை முரசில் தலைப்புச் செய்தியாகவும் பிரசுரமாகியிருந்தது.

தலைமைப் பதவிக்கு வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான கால எல்லை முடிந்து அடுத்த நாள் பகல் அவர் இந்த உரையை நிகழ்த்தி இருந்தார். மட்டக்களப்பு நிலைமை அறிந்துதான் அப்படி அவர் பேசியிருந்தாரோ... என்னவோ...?





# இரு கொம்பன் யானைகள் மின் வேலியில் சிக்கி சாவு

## புத்தளம் கருவலகஸ்வெவ தேவனுவர பகுதியில் சம்பவம்

புத்தளம் கருவலகஸ்வெவ தேவனுவர பகுதியில் மின்சார வேலியில் சிக்கிய நிலையில் இரண்டு கொம்பன் யானைகளின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன என கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இந்த கொம்பன் யானைகள் இரண்டும் நபரொருவரின் காணியிலேயே உயிரிழந்துள்ளன என திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

“வாசல” என்று அழைக்கப்படுகின்ற கொம்பன் யானை நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளதாகவும், “வலகம்பா” என்று அழைக்கப்படுகின்ற மற்றைய கொம்பன் யானை ஒரு வாரத்துக்கு முன்பே உயிரிழந்துள்ளதாகவும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

“வாசல“ யானைக்கு 35 வயது இருக்கலாம் எனவும் “வலகம்பா“ யானைக்கு 40 வயது இருக்கலாம் என அதிகாரிகளால் கூறப்படுகிறது.

அதிக வலு கொண்ட மின்சார வேலியைப் பொருத்தியமையினாலேயே இக்கொம்பன் யானைகள் இரண்டும் உயிரிழந்துள்ளன எனத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

காணி உரிமையாளர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், கருவலகஸ்வெவ பொலிஸார் மற்றும் கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த யானைகள் இரண்டுக்கும் நிக்கவெரெட்டிய மிருக வைத்தியர் இசுருவினால் உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கூறியுள்ளனர்.













# காங்கேசனில் அதிக எண்ணிக்கையில் படையினரின் கவச அங்கிகள் மீட்பு!

யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை, மாங்கொல்லைப் பகுதியில் பெரும் எண்ணிக்கையான இராணுவ அங்கிகள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 33 வருடங்களுக்கு மேலாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த காங்கேசன்துறை – மாங்கொல்லை பகுதி அண்மையில் விடுவிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் இருந்து பெரும் எண்ணிக்கையான இராணுவ அங்கிகள் (குடயம தயஉமநவ) கண்டெடுக்கப்பட்டுள்ளன.

விடுவிக்கப்பட்ட பகுதியில், காணி ஒன்றினை அதன் உரிமையாளர் தூய்மை செய்து , கிணற்றினை இறைத்த போது கிணற்றினுள் இருந்து பெருமளவான இராணுவ அங்கிகள் மீட்கப்பட்டுள்ளன.

அது தொடர்பில் இராணுவத்தினருக்கு அறிவித்ததை அடுத்து இராணுவத்தினர் , தாம் அதனை அப்புறப்படுத்துவார்கள் எனக் கூறியுள்ளனர்.



இவை யுத்தத்தில் ஈடுபடும் இராணுவத்தினர், தமது உயிரை பாதுகாத்து கொள்வதற்காக அணிந்து கொள்ளும் ஒருவகை கவச அங்கி என்பது குறிப்பிடத்தக்கது.

## முதலை தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முதலையின் தாக்குதலுக்குள்ளாகி பண்ணையாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தம்பலகாமம் – சிப்பித்திடல் பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான கே.சசிகுமார் (வயது 36) என்ற பண்ணையாளரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தம்பலகாமம் பகுதியைச் சேர்ந்த மேற்படி பண்ணையாளர் நேற்றுக் காலை கால்நடைகளை மேய்ப்பதற்காகப் பாலம்போட்டாறு பகுதியில் உள்ள ஊத்த வாய்க்கால் என்ற வாய்க்காலைக் கடந்து சென்றபோது காணாமல்போயிருந்தார்.

பொதுமக்களால் முன்னெடுக்கப்பட்ட தேடுதலின்போது அந்த நபரின் சடலம் நேற்று மாலை 4 மணியளவில் வாய்க்காலில் இருந்து மீட்கப்பட்டு திருகோணமலை வைத்தியசாலைக்குப் பிரேத பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

தம்பலகாமம் பகுதியில் உள்ள 45 இற்கும் மேற்பட்ட பண்ணையாளர்கள் தங்களுடைய 1,200 இற்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை இன்றி பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்ற நிலையில் இவ்வாறான சோகச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த மரணம் தொடர்பான விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வடக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாற்றலாகிய ஆ.சிறி, வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தின் செயலாளராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ்ஸால் நியமிக்கப்பட்ட நிலையில் எதிர்வரும் புதன்கிழமை அவர் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

## காலநிலை மாற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

உலக நாடுகள் பாரிஸ் உடன்படிக்கைக்கு இணங்கிய போதிலும், அந்த நாடுகள் ஒப்புக்கொண்ட இலக்குகளை அடைவதற்கு ஆதரவளிக்கும் வகையில் குறிப்பிடத்தக்க நிறுவன மாற்றங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

இந்த அவசரத் தேவையை உணர்ந்து, காலநிலை மாற்றத்தைக் குறைப்பதற்கான தீர்மானமிக்க முயற்சிகளுக்குப் பங்களிப்பதற்குத் தேவையான திறன் மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்காக காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்குப் பரிந்துரைத்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

உத்தேசிக்கப்பட்டுள்ள காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தை இலங்கையில் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள 600 ஏக்கர் நிலப்பரப்பில் ஸ்தாபிக்கப்படவுள்ளதுடன், இப்பல்கலைக்கழகம் இலங்கைக்கு மட்டுப்படுத்தப்பட்டதல்ல என்றும், அது சர்வதேச பல்கலைக்கழகமாக செயற்படும் எனவும், அதற்காக உலகில் உள்ள அனைத்து நாடுகளினதும் ஆதரவையும் பங்களிப்பையும் எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

பங்களாதேஷ், சீஷெல்ஸ் மற்றும் மோல்டோவா போன்ற நாடுகள் ஏற்கனவே இந்தப் பணிக்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன என்று குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, காலநிலை மாற்றத்துக்கு எதிரான போராட்டம் ஒரு தேசத்தின் பொறுப்பல்ல எனவும், முழு உலகமும் அதனுடன் கைகோர்க்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## நஞ்சருந்தி உயிர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெண்ணே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

உறவினர் ஒருவருக்கு 20 பவுண் நகை வழங்கியது தொடர்பில் தாய்க்கும் மகளுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக இருவரும் நஞ்சருந்தி தற்கொலைக்கு முயற்சித்தனர்.

இருவரும் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் ஆபத்தான நிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

தாய் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை 4 மணியளவில் உயிரிழந்தார்.

அவருடைய மகள் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

உயிரிழந்தவரின் சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ரணிலைத் தோற்கடிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் கூறுகையில்,

“நிதி அமைச்சர் என்ற வகையில் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள வரவு – செலவுத் திட்டத்தை எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதி வாக்கெடுப்பின்போது தோற்கடிக்கச் சிலர் சதித்திட்டம் தீட்டுகின்றனர். அந்தச் சிலரின் சதித் திட்டம் வெற்றியளிக்காது. ஏனெனில் பலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பக்கம் உள்ளார்கள்.

வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் அரசும் கவிழும். அந்த நிலைமை ஏற்பட மொட்டுக் கட்சி இடமளிக்காது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடிக்க நாங்கள் ஆதரவு வழங்க மாட்டோம். பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்தப் பெருந்தலைவராகவே நாங்கள் ரணில் விக்கிரமசிங்கவைப் பார்க்கின்றோம். அவர் ஜனாதிபதிப் பதவியைப் பொறுப்பேற்க மறுத்திருந்தால் இன்று நாட்டின் நிலைமை படுமோசமடைந்திருக்கும். அவரை மாதிரி சிறந்த ஒரு தலைவர் இன்று இல்லை என்பதை நான் வெளிப்படையாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.” – என்றார்.

## பொலிஸின் கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸாரின் இவ்வாறான செயற்பாடுகளை நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.”

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் – வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் கொடூர சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு உயிரிழந்தார் எனக் கூறப்படும் நாகராசா அலெக்ஸ் என்ற இளைஞருக்கு நீதி கோரி வட்டுக்கோட்டைச் சந்தியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

“அண்மையில் வட்டுக்கோட்டை பொலஸாரால் கைது செய்யப்பட்ட அலெக்ஸ் என்ற இளைஞர் மிகக் கொடூரமான முறையிலே சித்திரவதை செய்யப்பட்டு அடித்துப் படுகொலை செய்யப்பட்டிருக்கின்ற சம்பவத்தை நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.




உயிரிழந்த இந்த இளைஞரும் அவரது குடும்பத்தவர்களும் சமூகத்திலே மிக மதிப்போடு வாழ்ந்து வந்தவர்கள். ஆனால், பொலிஸார் சமூகத்திலே தாங்கள் செய்கின்ற சமூக விரோதச் செயற்பாடுகளை மூடி மறைப்பதற்காக அப்பாவிகளைக் கைது செய்து அவர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி சித்திரவதை செய்து கொலை செய்துவிட்டு அவர்கள் மீது அபாண்டமான பழிகளைச் சுமத்தி இருப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தச் சம்பவத்திலே சம்பந்தப்பட்ட பொலிஸார் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

தமிழர் பிரதேசங்களில் தமிழ் மக்களுக்கு எதிரான இவ்வாறான செயற்பாடுகளில் பொலிஸார் தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டுதான் வருகின்றார்கள்.

குறிப்பாக யுத்தம் நடைபெற்ற காலங்களில் இருந்து இராணுவத்தோடு சேர்ந்து தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், இனப்படுகொலைகள் போன்ற சம்பவங்களிலே இந்தப் பொலிஸாரும் சம்பந்தப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிரான பாரிய குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக இந்த நாட்டில் எந்தவிதமான நீதி விசாரணைகளும் நடத்தப்படவில்லை.

ஏனெனில் அவர்கள் யுத்தத்தின் இறுதியில் வெற்றி பெற்றிருக்கின்ற நிலைமையிலே தாங்கள் செய்த படுகொலை மனநிலையோடுதான் தொடர்ந்தும் பொலிஸ் என்ற கடமைக்குள் இருந்து கொண்டு வடக்கு – கிழக்கில் தங்கள் அராஜகத்தைப் புரிந்து வருகின்றார்கள்.

தமிழ் மக்களுடைய அடிப்படை உரிமைகளை மறுப்பதும், தமிழ் மக்களுக்கு எதிராகக் காட்டுச் சட்டங்களைப் பயன்படுத்துவதும், தமிழர்கள் மீது ஈவிரக்கம் இல்லாத தாக்குதல்கள், சித்திரவதைகளை நடத்துவதும் பொலிஸாரின் வழமையான நடவடிக்கையாக இருக்கின்றது.

ஆகவே, பொலிஸாரின் இவ்வாறான செயற்பாடுகளை நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். யுத்த காலத்திலேயே இனப் படுகொலையோடு சேர்ந்து செயற்பட்ட பங்காளர்களான பொலிஸார் வடக்கு, கிழக்கிலே பல உயர் பதவிகளில் இருக்கின்றபோது அவர்களுக்குக் கீழே செயற்படுகின்றவர்களும், புதிதாகச் சேர்ந்து கொள்பவர்களும் அது தமிழர்களாக இருந்தாலும் கூட அவர்களுடைய மேலதிகாரிகளின் மனநிலைக்கு உள்வாங்கப்பட்டு சாதாரண தமிழ் மக்களை மிகக் கொடூரமான முறையில் சித்திரவதை செய்கின்ற வக்கிர மனம் கொண்டவர்களாக மாற்றப்படுகின்றார்கள்..

ஆகவே இந்த முறைமை முற்றாக மாற்றப்பட வேண்டுமாக இருந்தால் எங்கள் மீது நடைபெற்ற இனப்படுகொலைக்கு முழுமையான சர்வதேச விசாரணை நடைபெற்று இராணுவத்தினர் மட்டுமல்ல இந்த இனப்படுகொலையோடு தொடர்பட்ட பொலிஸாரும் தண்டிக்கப்படுகின்றபோதுதான் பொலிஸார் மனிதர்களை நேசிக்கின்ற ஒரு சூழல் உருவாகும். இல்லையென்றால் மனிதர்களை வேட்டையாடுகின்ற இனவெறி பிடித்தவர்களாக அவர்கள் இருப்பார்கள்.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிங்களவர்கள் உயர் பதவிகளில் இருக்கின்றதால் தமிழ் மக்களுக்கு எதிராகவும் முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் இனவெறி மனப்பாங்கு கொண்டவர்களாகவும் மதவெறி மனப்பாங்கு கொண்டவர்களாகவும் பல இடங்களில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இதேவேளை, கடந்த வாரம் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வுகளில் கூட அப்பாவிகளைக் கைது செய்து பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி மிக மிகக் கொடூரமான சட்டத்தின் கீழ் வழக்குகளைக் கூட பதிவு செய்திருக்கின்றார்கள்.

மிக மிகக் கொடூரமான சட்டத்தின் கீழ்தான் இவர்களுக்கு எதிரான வழக்குகளைப் பதிவு செய்திருக்கின்றார்கள். அதற்குப் பொலிஸாரின் இனவெறி மனநிலை மற்றும் வக்கிர மனநிலைதான் காரணமாக இருக்கின்றது.

ஆகவே, இதற்கு எதிராக நாங்கள் எல்லோரும் ஒன்றுதிரண்டு போராடினால் மட்டும்தான் அப்பாவிகளுடைய இருப்பையும் உயிர்களையும் பாதுகாக்கக் கூடியதாக இருக்கும். அதற்காக நாங்கள் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்.” – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## இந்தியாவில் நீதிமன்றை நாடுவோம்!

இலங்கையுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர்பான விடயத்தில் இந்தியா சரியாக நடந்து கொள்ளவில்லை என்று இந்திய நீதிமன்றம் ஒன்று தனது தீர்ப்பில் கடிந்து குறை கூறியுள்ளது. இலங்கையுடன் இந்தியா செய்து கொண்ட ஒப்பந்தங்களின் விடயத்தில் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல இந்தத் தீர்ப்பு வெளிப்பட்டிருக்கின்றது.

சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வு ஆயம் கடந்த வியாழனன்று இந்த முக்கியத்துவம் மிக்க தீர்ப்பை வழங்கியிருக்கின்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்த கையோடு, ஆட்சி அதிகாரம் பௌத்த - சிங்களப் பேரினவாதிகளின் கைகளுக்கு மாறியதும், இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளித் தமிழர்கள் பத்து லட்சம் பேரின் குடியுரிமையைப் பறித்து, அவர்களை நாடற்றவர்களாக்கியது இலங்கை அரசு.

இதையொட்டி இலங்கை-இந்திய அரசுகளுக்கு இடையில் இழுபறிகள் நீடித்த பின்புலத்தில், இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக 1964இல் சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தமும், 1974 இல் சிறிமாவோ - இந்திரா காந்தி ஒப்பந்தமும் செய்யப்பட்டன.

இலங்கை - இந்தியப் பிரதமர்கள் செய்து கொண்ட இந்த ஒப்பந்தங்களின்படி நாடற்றவர்கள் என்ற நிலையில் இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட ஆறு லட்சத்துக்கும் குறையாத இந்திய வம்சாவளியினருக்கு பிரஜா உரிமை வழங்க இந்தியா ஒப்புக்கொண்டது.

ஆனால், இதுவரை அத்தகைய வழியில் ஆக 4 லட்சத்து 61 ஆயிரத்து 639 பேருக்கே இந்தியா பிரஜாவுரிமை வழங்கியிருக்கின்றது.

இந்த ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு ஏறத்தாழ 50 ஆண்டுகள் - அரை நூற்றாண்டு - கடந்த பின்னரும் தனது கடப்பாட்டை இந்தியா சரிவர நிறைவு செய்யவில்லை என சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வு ஆயம் தனது தீர்ப்பின் குறை கூறியிருக்கின்றது.

அதனால் கடந்த 33 ஆண்டுகளாக இந்தியாவில் 'அகதி' என்ற பெயரில் தஞ்சம் அளிக்கப்பட்டு இருக்கும் மனுதாரரான கணேசனுக்கு உடனடியாக இந்தியக் குடியுரிமையை வழங்கி, சான்றிதழ் அளிக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது.

சிறிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம் சிறிமாவோ - இந்திரா காந்தி ஒப்பந்தம் ஆகியவற்றின் ஏற்பாடுகளை மட்டுமல்ல, 1987 இல் ராஜீவ் - ஜே.ஆர். செய்து கொண்ட இலங்கை - இந்திய ஒப்பந்த வாசகங்களை நடைமுறைப்படுத்தச் செய்வதிலும் கூட புதுடில்லி அரசு மெத்தனமாகவும் பொறுப்பின்றியும் செயற்பட்டு வந்திருக்கின்றமை கண்கூடு.

முன்னைய இரண்டு ஒப்பந்தங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்ட கணேசன் என்ற மனுதாரர் இந்திய நீதிமன்றுக்குச் சென்று நிவாரணம் பெற்றமை போல, 1987 இல் ராஜீவ் - ஜே.ஆர். செய்து கொண்ட இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியா நிறைவேற்றத் தவறியுள்ள பொறுப்புகள் குறித்து இந்தியத் தரப்புக்கு எதிராக நீதி கேட்டு, இந்திய நீதிமன்றங்களை அணுகுவதற்கான வாய்ப்புகள் பற்றி நமது சட்ட வட்டாரங்கள் ஆராய்ந்து பார்த்து, தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டிய சூழல் வந்திருக்கின்றது.

நமது சட்ட மேதைகளுக்கும், சட்டத்துறையினருக்கும் இந்த விடயம் சமர்ப்பணம்.

# ரயிலுடன் மோதிய கார்




பெலியத்தவிலிருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த ரஜரட்ட ரெஜினு கடுகதி ரயில் மோதியதில் கார் ஒன்று சேதமடைந்துள்ளதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் வஸ்கடுவ பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்குக் காரில் சென்றுகொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச்சம்பவம்தொடர்பில்பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# பா.ஜ.கவுக்கு அசைக்க முடியாத ஆதரவை வழங்கிய மக்களுக்கு நன்றி!

## - பிரதமர் மோடி தெரிவிப்பு



சட்டப் பேரவை தேர்தலில் பா.ஜ.கவுக்கு அசைக்க முடியாத ஆதரவை வழங்கிய மக்களுக்கு நன்றி எனவும் தெலுங்கானா மாநில மக்களுக்காக தொடர்ந்து பணியாற்றுவோம் என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஷ்கார், தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் வாக்குகள் எண்ணும் பணி நேற்று நடைபெற்றது.

நேற்று மாலை 4.45 மணி நிலவரப்படி, மத்திய பிரதேசத்தில் 230 இடங்களில் 167 இடங்களிலும், ராஜஸ்தானில் 199 இடங்களில் 116 இடங்களிலும், சத்தீஷ்காரில் 90 இடங்களில் 55 இடங்களிலும் பா.ஜ.க. முன்னிலை வகித்தது. 3 மாநிலங்களில் பா.ஜ.க. தனித்து ஆட்சி அமைக்க உள்ளது.

மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஷ்கார் ஆகிய மாநிலங்களில் பா.ஜ.க. வெற்றியைப் பெற்றுள்ள நிலையில், வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, இந்திய மக்கள் நல்லாட்சி மற்றும் வளர்ச்சிக்கான அரசியலைத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்பதை இந்த முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன என தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்,

“பா.ஜ.க. மீது அசைக்க முடியாத ஆதரவை வழங்கிய மக்களுக்கு நன்றி. 4 மாநிலத்தில் பா.ஜ.கவுக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி.

நல்ல நிர்வாகம், வளர்ச்சி, அரசியல் ஆகியவற்றுக்கு மக்கள் உறுதுணையாக நிற்கின்றனர் என்பதற்கு தேர்தல் முடிவுகள் சாட்சி. கடந்த சில ஆண்டுகளாக பா.ஜ.கவிற்கு வழங்கிய தொடர் ஆதரவிற்கு தெலுங்கானா மாநில மக்களுக்கும் நன்றி .

தெலுங்கானா மாநில மக்களுடைய எங்களது பிணைப்பு பிரிக்க முடியாதது, அவர்களுடன் தொடர்ந்து பணியாற்றுவோம். மக்கள் நலனுக்காக தொடர்ந்து அயராது பாடுபடுவோம்.” என்று தெரிவித்துள்ளார்.

# தேர்தலில் தோல்வியால் பதவி துறந்தார் தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர் ராவ்

தெலுங்கானா மாநில சட்டப்பேரவை தேர்தலில் பாரதிய ராஷ்ட்ரிய சமிதி கட்சி தோல்வியை தழுவியுள்ளது.

இந்த நிலையில், சந்திரசேகர் ராவ் முதல்வர் பதவியை இராஜினாமா செய்துள்ளார். அவரது இராஜினாமாவை அம்மாநில ஆளுநர் தமிழிசை ஏற்றுக் கொண்டுள்ளார்.

தெலுங்கானா மாநிலத்தில் உள்ள 119 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் கடந்த 30 ஆம் திகதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது. ஆளும் கட்சியாக உள்ள பி.ஆர்.எஸ், காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. ஆகிய கட்சிகள் தேர்தல் களத்தில் போட்டியிட்டன. இதில் மக்களின் ஆதரவை காங்கிரஸ் பெற்று, ஆட்சி அமைக்க உள்ளது. இந்த நிலையில், தனது முதல்வர் பதவியை இராஜினாமா செய்துள்ளார் சந்திரசேகர் ராவ். இது குறித்து அம்மாநில ஆளுநர் அலுவலகம் தெரிவிகையில்,



தனது முதல்வர் பதவியை இராஜினாமா செய்வதாக சந்திரசேகர் ராவ், ஆளுநருக்கு கடிதம் மூலம் தெரிவித்திருந்தார். அவரது இராஜினாமாவை ஆளுநர் ஏற்றுக் கொண்டார். அதோடு புதிய அரசு ஆட்சி அமைக்கும் வரையில் பதவியில் தொடரும் படி அவரிடம் ஆளுநர் கேட்டுக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2014 இல் உதயமான தெலுங்கானா மாநி லத்தில் 2014 மற்றும் 2018 இல் நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் பாரதிய ராஷ்ட்ரிய சமிதி கட்சி ஆட்சியை பிடித்தது.

அதன் காரணமாக பி.ஆர்.எஸ். கட்சியின் தலைவரான சந்திரசேகர் ராவ், முதல்வராக பொறுப்பேற்று ஆட்சி நடத்தினார். 2023 சட்டப்பேரவை தேர்தலில் தோல்வியை தழுவியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 8 இடங்களிலும் தோல்வியடைந்த பவன் கல்யாண் கட்சி!

தெலுங்கானாவில் சினிமாவில் இருந்து அரசியலுக்கு வந்த நடிகர்களில் பலரும் பெரிதான வெற்றியை பெற்றிடவில்லை.

இந்தநிலையில், தீவிர அரசியலில் களமிறங்கியவர் பவன் கல்யாண். ஜனசேனா என்ற கட்சியை 2014 இல் துவங்கிய அவர், 2018 ஆம் ஆண்டின் ஆந்திர சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டார்.

ஆனால், அந்த தேர்தலில் மொத்த தொகுதியிலும் தோல்வியுற்ற போதிலும், பவன் கல்யாண் தொடர்ந்து தீவிர அரசியலில் ஈடுபட்டு வருகின்றார். இந்தநிலையில், தெலுங்கானா சட்டப்பேரவை தேர்தலில், பவன் கல்யாணின் ஜனசேனா கட்சி, பா.ஜ.க. உடன் கூட்டணி அமைத்து 8 தொகுதிகளில் போட்டியிட்டது. போட்டியிட்ட 8 தொகுதிகளிலும் நடிகர் பவன் கல்யாணின் ஜனசேனா கட்சி தோல்வியடைந்துள்ளது.

# காசாவில் கண்காணிப்பு விமானங்களை ஈடுபடுத்தவுள்ளதாக பிரித்தானியா அறிவிப்பு



ஹமாஸ் அமைப்பினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பணயக் கைதிகளைக் கண்டறிவதற்காக காசா பகுதியில் தமது இராணுவம் கண்காணிப்பு விமானங்களை ஈடுபடுத்தவுள்ளதாக பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஹமாஸ் அமைப்பினரால் கடந்த ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி முதல் சிறைப்பிடிக்கப்பட்ட சுமார் 240 பணயக் கைதிகளில் சுமார் 110 பேர் அண்மைய போர் நிறுத்த காலப்பகுதியில் விடுவிக்கப்பட்டனர்.

ஹமாஸ் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பாலஸ்தீனப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் இஸ்ரேல் தாக்குதல்களை நடத்திவருகிறது.

காசாவில் இன்னும் 130 இற்கும் மேற்பட்ட பணயக்கைதிகள் உள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில், பணயக்கைதிகளை மீட்கும் நடவடிக்கைக்கு ஆதரவாக, கிழக்கு மத்திய தரைக்கடல் மீது தமது கண்காணிப்பு விமானங்களை ஈடுபடுத்தவுள்ளதாக பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும், இந்த விமான கண்காணிப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் நாள் தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை.

எனினும், விமானத்தில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் நிராயுதபாணிகளாக இருப்பார்கள் எனவும் பணயக்கைதிகளை மீட்கும் முயற்சிகளில் மட்டுமே கவனம் செலுத்துவார்கள் என்றும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காசாவின் பிரபல விஞ்ஞானி பலி!



இஸ்ரேல் விமானப்படை நேற்று முன்தினம் நடத்திய விமானத்தாக்குதலில் காசாவின் பிரபல விஞ்ஞானி அவரது குடும்பத்துடன் கொல்லப்பட்டுள்ளனர் என பாலஸ்தீனிய உயர்கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பேராசிரியர் சுஃபியான் தாயே மற்றும் அவரது முழு குடும்பமுமே விமானத்தாக்குதலில் உயிரிழந்துள்ளனர்.

பேராசிரியர் தாயே ஒரு முக்கிய பாலஸ்தீனிய விஞ்ஞானி மற்றும் முன்னணி கல்வி நிறுவனமான காசா இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் தலைவராக இருந்தவராவார்.

ஒக்டோபர் 7 இற்குப் பின்னர் இஸ்ரேலிய தாக்குதல்களில் கொல்லப்பட்ட முதல் கல்வியாளர் பாலஸ்தீனிய விஞ்ஞானி அல்ல. எவ்வாறாயினும், அவரது கொலை, பிராந்தியம் முழுவதும் உள்ள கல்வி சமூகத்தின் மத்தியில் அதிர்ச்சி அலைகளை எழுப்பியுள்ளது.

திறமையான விஞ்ஞானி மற்றும் அன்பான குடும்ப மனிதன் இயற்பியல் மற்றும் பயன்பாட்டு கணிதத்தில் ஒரு முன்னணி ஆராய்ச்சியாளராக இருந்ததாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டில், குட்ஸ் நியூஸ் நெட்வேர்க்கின் படி, அவர் உலகின் சிறந்த ஆராய்ச்சியாளர்களில் இரண்டு சதவீதத்தில் ஒருவராக வகைப்படுத்தப்பட்டார்.

உண்மையில், தயேயின் ஆராய்ச்சி ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு உட்பட சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹந்தான மலைப்பகுதியில் சிக்கியிருந்த பல்கலை மாணவர்கள் பாதுகாப்பாக மீட்பு

கண்டி – ஹந்தான மலைப் பகுதிக்கு சுற்றுலா சென்று சிக்கியிருந்த பல்கலைக்கழக மாணவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

பனி மூட்டம் மற்றும் மழையுடனான வானிலையினால் 181 மாணவர்கள் அந்த மலைப்பகுதியில் சிக்கியிருந்தனர்.

நேற்று முன்தினம் மாலை முதல் மாணவர்களை மீட்கும் பணிகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டிருந்தனர்.

மீட்புப் பணிகளில் மாணவர்கள் அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

ராகம விஞ்ஞான பீட மாணவர்கள் சிலரே இவ்வாறு சுற்றுலா சென்றிருந்தனர்.



# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு, நுகேகொடை, மஹரகம, கம்பஹா, வத்தளை, களனி மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், இன்று முதல் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






## கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தின்

# நிர்மாணப் பணிகள் அடுத்த வருடம் நிறைவு

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய நிர்மாணப் பணிகள் அடுத்த வருடத்தின் நடுப்பகுதியில் நிறைவடையும் என துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த முனையத்தின் நிர்மாணப் பணிகள் தற்போது இடம்பெற்று வரும் நிலையில், அதில் 1,400 மீற்றர் நீளம் கொண்ட இறங்குதுறை நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

அதன் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த பிறகு, ஒரே நேரத்தில் 3 பாரிய கப்பல்களை நிறுத்த முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பாலியல் குளிசைகள், ஜெல் சுற்றிவளைப்பில் சிக்கின!

ாலியல் நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்படும் குளிசைகள், ஜெல் போன்ற மருந்துவகைகளை பாரியளவில் சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் கொண்டுவந்து களஞ்சியப்படுத்தியிருந்த ஒருவரை குணசிங்கபுரவில் உள்ள வீடொன்றில் நேற்று சுற்றிவளைத்து குற்றத் தடுப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாலியல் நடத்தைகளுக்குப் பயன்படுத்தப்படும் இம் மருந்து வகையில் இந்தியாவில் இருந்து கொண்டு வந்து கொழும்பு 12, சில்வா சுஜித் குறுக்குத் தெரு முகவரியில் உள்ள வீடொன்றில் இந்நபர் களஞ்சிப்படுத்தியிருந்தார் என்று கூறப்படுகின்றது.

61 வயதுடைய நபர் ஒருவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.





# தொழில் முனைவோர்களுக்கு இரண்டு வீத வட்டியில் கடன்!

## இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தகவல்

இரண்டு வீத கடன் வட்டி நிவாரணத்தின் கீழ் தொழில் முனைவோருக்கு தேவையான மூலதனத்தை வழங்குவதாக சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்துள்ளார்.

இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து மூவாயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.



நாட்டின் மொத்த சனத்தொகையில் 2.8 வீதமான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் பணி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

2028 ஆம் ஆண்டிற்குள் தொழில் முனைவோர் எண்ணிக்கையை 10 வீதமாக உயர்த்துவதே இதன் இலக்கென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மட்டு. சிறையில் அடித்துக் கொல்லப்பட்ட கணவருக்கு நீதி கோருகின்றார் மனைவி!

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட எனது கணவரை ஏனைய சிறை கைதிகள் அடித்து கொலை செய்துள்ளனர். எனது கணவரைக் கொலை செய்தவர்கள் இதுவரையும் கைது செய்யப்படவில்லை. எனக்கு நீதி வேண்டும். இது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளேன். – என்று கொலை செய்யப்பட்ட சோமசுந்தரம் துரைராஜாவின் மனைவி தெரிவித்தார்.

எனது கணவர் கசிப்பு அருந்துபவர் தான். மீன் மற்றும் கருவாடு விற்பனை செய்துவருபவர். எனக்கு 3 பிள்ளைகள். கசிப்புத் தொடர்பான வழக்கு ஒன்றில் நீதிமன்றத்தில் என் கணவன் ஆஜராகாத நிலையில் அவருக்கு நீதிமன்ற பிடிவிறாந்து இருந்துள்ளது. கடந்த நவம்பர் 22 ஆம் திகதி அவரைக் கைது செய்த கொக்கட்டிச்சோலை பொலிஸார் 23 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். பிணை எடுக்க நாங்கள் செல்லமுடியாத காரணத்தால் அவரைப் பிணை எடுக்க யாரும் இல்லாது விளக்கமறியல் வைத்தனர்.








இந்த நிலையில் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கணவரை சிறைச்சாலையில் பார்வையிடுவதற்கு சமைத்து சோறு எடுத்துக் கொண்டு நானும் எனது மகளும் சென்றோம். சிறைச்சாலை அதிகாரிகள் சுமார் 30 நிமிடத்தின் பின்னர் உங்களது கணவன் சுகயீனமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்தனர்.

நாங்கள் அங்கு சென்று பார்த்த போது எனது கணவர் பிரேத அறையில் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றேன். அவர் மீது கால், கை, தலை, நெஞ்சுப் பகுதிகளில் அடி காயம் இருப்பதாகத் தெரிவித்தனர். பிரேத பரிசோதனையின்பின்னர்30ஆம்திகதிவெள்ளிக்கிழமை சடலத்தைத் தந்தார்கள். எனது கணவன் மீது பொல்லால் நடத்தப்பட்ட தாக்குதலில் அவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் அப்போது தெரிவித்தனர்.

அவருடன் அந்த சிறைக் கூடத்தில் 8 கைதிகள் இருந்துள்ளனர். எனது கணவனை அடித்துக் கொலை செய்தவர் யார் என்பது அவர்களுக்குத் தெரியும். என் கணவருக்கு எந்த வருத்தமும் இல்லை. அவர் கசிப்பு அருந்துவது மட்டும்தான். எனவே கணவரை கொலை செய்தவர்களை நீதியின் முன்னர் நிறுத்தவேண்டும்

சிறையிலேயே பாதுகாப்பு இல்லை. கணவருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு சிறைச்சாலைக் காவலர்கள் பொறுப்புக் கூறவேண்டும் அவர்களுக்கு எதிராக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளேன். பொலிஸார் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்த வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்தார்.



# நன்னடத்தை நிலையத்தில் சிறுவன் மரணம் பெண் மேற்பார்வையாளர் விளக்கமறியலில்!

**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை சிறுவர் நன்னடத்தை நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 14 வயது சிறுவனொருவன் உயிரிழந்துள்ள சம்பவம் தொடர்பில் கைதான அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண்ணை ஒரு நாள் (இன்று வரை) விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.எல். நதீர் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

மட்டக்களப்பு – கொக்குவில் பகுதியை சேர்ந்த 14 வயதான சிறுவன், ஆலயமொன்றிலிருந்த பொருள்களை திருடிய சம்பவம் தொடர்பில் கடந்த மாதம் 16 ஆம் திகதி கொக்குவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளின் பின்னர் மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் கடந்த 17 ஆம் திகதி சிறுவன் ஆஜர்படுத்தப்பட்டதை தொடர்ந்து, சிறுவர் நன்னடத்தை நிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்றைய தினம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த 30 ஆம் திகதி அந்த சிறுவன் உயிரிழந்துள்ளான் என நன்னடத்தை நிலையத்தினால் கல்முனை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

கடந்த 29 ஆம் திகதி பெண் பராமரிப்பாளரால், சிறுவன் தாக்கப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அதனையடுத்து, கல்முனை நீதவானின் உத்தரவிற்கு அமைய சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக அம்பாறை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

பிரேத பரிசோதனைகளின் பின்னர், சிறுவனின் சடலம் வெள்ளி இரவு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சிறுவனின் நெஞ்சுப் பகுதியில் தாக்கப்பட்டமையே மரணத்திற்கான காரணம் என பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட பெண் பராமரிப்பாளரும் தாம் சிறுவனை தாக்கினார் எனப் பொலிஸாரிடம் ஒப்புக் கொண்டார் எனக் கூறப்படுகின்றது.

# வெள்ளவத்தை கடற்கரையில் நேற்று ஜனகன் தலைமையில் சுத்திகரிப்பு!



(ஏ.எஸ்.மௌலானா)

IDMNC சர்வதேச கல்வி நிறுவனம் மற்றும் ஜனனம் அறக் கட்டளை இணைந்து ஏற்பாடு செய்திருந்த கடற்கரை சுத்தப்படுத்தல் பணி ஞாயிற்றுக்கிழமை நேற்று கொழும்பு, வெள்ளவத்தை கடற்கரைப் பகுதியில் இடம்பெற்றது.

ஜனுஆஃஊ சர்வதேச கல்வி நிறுவனத்தின் தவிசாளரும் ஜனனம் அறக் கட்டளையின் தலைவருமான கலாநிதி வி.ஜனகன் தலைமையில் இடம்பெற்ற இவ்வேலைத் திட்டத்தில் கல்வி நிறுவனத்தின் ஊழியர்களும் மாணவர்களும் சுற்றுச் சூழல் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.





# 2,600 கிராம உத்தியோகத்தர்களை சேவையில் இணைக்கத் தீர்மானம்

புதிதாக 2,600 கிராம உத்தியோகத்தர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

இதற்கான பரீட்சை நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.




அதற்கமைய, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதிக்கு முன்னர் கிராம உத்தியோகத்தர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.




# தம்பிலுவில் திருவாசக மாநாடு 15 ஆம் திகதி முதல் 3 நாள்கள்

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம் இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் எற்பாட்டில் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளி முதல் 17 ஆம் திகதி ஞாயிறு வரை தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய கலை அரங்கில் கலாபூசணம் தம்பிமுத்து மகேந்திரா தலைமையில் திருவாசக மாநாடு இடம் பெறவுள்ளது.

இது சம்பந்தமான ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இங்கு கருத்து வெளியிட்ட ஏற்பாட்டு குழுவினர் –

சமய, சமூக, ஆன்மிக, இறை ஆசி கிடைக்க வேண்டும் எனும் நோக்குடன் இந்தியாவில் இருந்து சூரியனார் கோவில் ஆதின தவத்திரு சிவாக்கர தேசிய சுவாமிகளின் வருகையை ஒட்டி இந்து ஸ்வயம் சேவக சங்கமும்




ஆலயங்களும் மற்றும் இந்து சமய அமைப்புக்களும் இணைந்து நடத்தும் திருவாசக மாநாட்டிற்கு அனைவரும் கலந்து இறை அருள் பெறுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

மேலும் முதலாம் நாள் நிகழ்வாக 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 6.00 மணிவரை "மணிவாசகப் பெருமானும் திருவாசகமும்" எனும் தலைப்பில் செயல் அமர்வு நடைபெறவுள்ளது.

2 ஆம் நாள் நிகழ்வாக 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 08.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணி வரை "திருவாசகம் ஓதுதலும் பொருள் கூறலும்" எனும் தலைப்பிலான செயலமர்வு நடைபெறும்.

3 ஆம் நாள் நிகழ்வுகள் 17 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 8.30 ஆரம்பித்து பிற்பகல் 2.00 மணியுடன் நிறைவு பெறவுள்ளன. – எனவும் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் தவத்திரு சிவாக்கர தேசிய சுவாமியின் அருளுரை, மாநாட்டின் திருவாசக நூல் வெளியீடு, மாநாட்டின் நிறைவை தொடர்ந்து உருத்திராட்சம் அணிவித்து தீட்சை வழங்கும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# அலெக்ஸின் மரணத்தை வைத்து கட்சி அரசியலைச் செய்யாதீர்கள்

## முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் வேண்டுகோள்




பொலிஸாரின் அராஜகத்தினால் உயிரிழந்த அலெக்ஸிற்கு நீதி வேண்டும். ஆனால் அதேநேரம் அந்தச் சம்பவத்தை வைத்து அரசியல் செய்வதை வன்மையாக கண்டிக்கின்றோம் என யாழ் வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் சுயேச்சைக் குழு சார்பில் முன்னர் உறுப்பினராகவிருந்த துரைராஜா சுயிந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற போராட்டம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அலெக்ஸிற்கு நடந்த விடயம் உண்மையில் கண்டிக்கப்பட வேண்டிய விடயம், அதற்கு நீதி வேண்டும்.

ஆனால், இந்தச் சம்பவத்தை வைத்துக் கொண்டு அரசியல் ரீதியான செயல்பாடுகளை செய்வதை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம்.

தவறிழைத்தது வட்டுக்கோட்டை பொலிஸாகவும் இருக்கலாம் அல்லது வேறு எந்த பொலிஸாகவும் இருக்கலாம். அதற்கு நீதி வேண்டும் என்பது கட்டாயத் தேவையாக இருக்கின்றது.

ஆனால் இது சம்பந்தமாக அரசியல் சார்ந்த சில செயல்பாடுகளை முன்னெடுத்து, ஓரிருவரை வைத்து அரசியல் நாடகம் செய்வதை தமிழ் மக்களாகிய நாங்கள் நிராகரிக்கின்றோம்.

உண்மையில் அரசியல் சார்ந்த செயற்பாடுகளை அரசியலோடு வைத்திருக்க வேண்டும், மக்கள் சார்ந்த விடயங்களை மக்களுக்கு சரியான முறையில் வழிநடத்த வேண்டும். மக்களை பிழையான முறையில் வழிநடத்திக் கொண்டு அரசியல் ரீதியான செயல்பாடுகளை இந்த இடத்தில் கொண்டு செய்வது என்பது உண்மையில் கண்டிக்கப்பட வேண்டிய விடயம்.

உண்மையில் பொலிஸ் குற்றம் செய்திருக்கின்றது, பொலிஸிக்கு தண்டனை கொடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது, தண்டிக்கப்பட வேண்டும் என்பதும் நியாயமான கோரிக்கையாக இருக்கின்றது. அந்தக் கோரிக்கையை நாங்கள் மறுக்கவில்லை. அதற்கான நீதி கட்டாயம் தேவை. அந்த நீதிக்காக நாங்கள் போராட வேண்டும்.

ஆனால் அரசியல் சார்ந்த தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தங்களுடைய சின்னங்கள் பொறிக்கப்பட்ட விடயங்களைக் காட்டி, தங்களுக்கு சுயலாப அரசியலை தேடுகின்றவர்கள் அதில் தவறிழைக்கின்றார்கள்.

அலெக்ஸ் இறந்த உடன் இந்த இடத்துக்கு யாரும் வரவில்லை. அது மன வேதனையான ஒரு விடயம். அந்த இடத்தில் நாங்கள் நின்றிருந்தோம். ஓரிரு பத்திரிகையாளர்களுடன் இரவு எட்டு மணி வரை இவ்விடத்தில் இருந்திருக்கின்றோம். அப்போது யாரும் வரவில்லை. தங்களுடைய தேவைகளுக்காக இப்போது வந்து ஒரு வேலை திட்டத்தை செய்கிறார்கள்.

அலெக்ஸிற்கு இனி வரும் காலத்தில் ஒரு நீதி வேண்டும். அந்த நீதி நீதிமன்றத்தின் ஊடாக கட்டாயம் கிடைக்கும் என்பதை நாங்கள் விரும்புகின்றோம். அவர்கள் ஊடாக வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு உடனடியாக நடவடிக்கை தேவை என்பதையும் நாங்கள் விரும்புகின்றோம்.

அரசியல் செயற்பாட்டாளர்கள் அரசியல் சார்ந்த விடயங்களை மக்களின் இத்தகைய பிரச்சினைகளை வைத்து முன்னெடுக்க வேண்டாம் என்பதை நான் கூறுகின்றேன். – எனத் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.12.2023




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. இன்று சில விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண அதனை தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் புனரமைப்பிற்காக பணம் செலவு செய்ய நேரலாம். தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடும் சூழல் ஏற்படும். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். சமூக கூட்டங்களில் கலந்து கொள்வீர்கள். புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்வீர்கள்.

வெற்றிகரமான பலன்களைக் காண கடினமாக உழைக்க வேண்டும். சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் வைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள் வலி ஏற்படலாம். தியானப் பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கலாம். தைரியம் மற்றும் உறுதி கொண்டால் நன்மை கிடைக்கும். இன்று மொத்தத்தில் வளர்ச்சி கிடைக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

நீங்கள் புத்துணர்ச்சியோடு வேலையை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டமான நாள். பண வரவு காணப்படும்.

உங்கள் மன வலிமை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று நீங்கள் உற்சாகத்துடன் இருக்க வேண்டும். அதிக சிந்தனைகளை தவிர்க்க வேண்டியது அவசியம். ஆன்மீகத்தில் ஈடுபட்டு அமைதி காணலாம்.

அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. உங்கள் பொறுப்புகளை ஆற்றும் போது கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் எரிச்சலும் கோபமும் அடைவீர்கள். எனவே உங்கள் பிரியமானவரிடம் நட்பு முறையோடு பழகுவது நல்லது.

அஜாக்கிரதை காரணமாக பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. நிதி நிலைமையை மோசமாக்கக்கூடிய வகையில் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம். உணவு முறையில் கவனம் தேவை.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் இருப்பது நல்லது. இன்று தெளிந்த மனதுடன் இருந்தால் உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்கலாம்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். பணியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் மனதில் உள்ள கசப்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள்.இதனால் குழப்பம் ஏற்படும். உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவினங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். சிறிது பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று முதுகுவலி வருவதற்கான வாய்ப்பு உள்ளது. பிரார்த்தனை அல்லது தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் செயல்கள் சுமுகமாக நடக்க அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி காணலாம்.

அதிக பணிகளை சந்திக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடன் சகஜமாகப் பழகவும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் புரிந்துகொண்ட மனநிலையோடு பழக வேண்டும்.

நிதிநிலைமை சீராக இருக்காது. இன்றைய செலவினங்களை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று மகிழ்ச்சியளிக்கத்தக்க வகையில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் எதிர்காலத்தைப் பற்றிய பரந்த நோக்கு காணப்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய கடினமாக உழைப்பீர்கள். உங்கள் வழியில் வரும் தடைகளை தகர்த்தெறிவீர்கள்.

நீங்கள் பலனை அதிகம் எதிர்பார்க்காமல் பணியாற்றுவீர்கள். இதனால் குறித்த நேரத்தில் பணிகளை ஆற்றுவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டையும் ஆதரவையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருப்பீர்கள். இதனால் இருவரும் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். வங்கியிருப்பு உங்களுக்கு சாதகமான வகையில் பராமரிப்பீர்கள்.




இன்று சுமுகமான பலன்கள் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைய இந்நாளை பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று உங்கள் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் உறுதியானது. இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் நம்பிக்கை உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். இன்று நிதி வளர்ச்சிக்கு உங்கள் ஆற்றலை பயன்படுத்திக் கொள்ளலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.12.2023




இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். புதிய மனிதர்களின் தொடர்பும் அதனால் நல்ல பயனும் கிடைக்கும். இதனால் உங்கள் தொடர்பு வட்டம் விரிவடையும். வாழ்க்கை உங்களுக்கு கவர்ச்சிகரமாக இருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணிகள் அதிகமாக இருக்கும். அவைகளை திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடும் விவாதங்களும் காணப்படும். இரவரும் நட்பு முறையோடு பழகுவீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று சுமாரான நாள். பண வரவிற்கும் சேமிப்பிற்கும் அதிர்ஷ்டம் குறைவான நாள்.




இன்று மகிழ்ச்சி அலை வீசும். முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும்.

உங்களின் தனித்தன்மைக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் கீழ் பணிபுரிபவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்களின் தகவல் பரிமாற்றம் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். புதிய முதலீடுகளுக்கு திட்டமிடலாம்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் உறுதியும் ஆற்றலும் நிறைந்திருக்கும்.




இன்று காணப்படும் கடினமான சூழல் காரணமாக தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதன் மூலம் இந்தச் சூழ்நிலைகளை ஜெயிக்கலாம். பிரார்த்தனை நல்ல பலன் தரும்.

பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்களின் குழப்பமான மன உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்த எண்ணுவீர்கள். இருவரும் சமமாகப் பழக மகிழ்ச்சியாக நட்புடன் பழக வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்படலாம். உங்களின் பிரியமான ஒருவரின் உடல் நிலைக்காக பணம் செலவு செய்ய நேரும்.

தோல் சம்பந்தமான ஒவ்வாமை காணப்படும்.




இன்று விரும்பிய பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும் வகையில் பயனுள்ள திட்டங்களை தீட்டுங்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். பல நன்மைகளை அடைவதற்கான சாத்தியம் உள்ளது. கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் நெருங்கிய நண்பர் ஒருவரின் திருமண விழாவில் இருவரும் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களின் வாழ்க்கைத் துணைக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பண வரவு சாதகமாக உள்ளது. உங்களின் சேமிக்கும் ஆற்றல் உயரும், இதனால் பொருளாதார பாதுகாப்பு காணப்படும்.









## அல்ட்ராவின் அனுசரணையுடன்

# காத்தான்குடியில் நடந்த பட்மின்டன் சுற்றுப் போட்டி

(அஸ்ஹர் இப்றாஹிம்,
கே எ ஹமீட் )

அல்ட்ரா நிறுவனத்தின் அனுசரணையுடன் அல்ட்ரா சம்பியன்ஸ் கிண்ணத்திற்கான பெட்மின்டன் சுற்றுப் போட்டியொன்று காத்தான்குடி பட்மின்டன் கழகத்தால் நடத்தப்பட்டது.

இந்தப் போட்டி அல்ட்ரா பெட்மின்டன் உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இதில், இருபது வயதுக்கு உட்பட்டோர். நாற்பது வயதுக்கு மேற்பட்டோர் இருபது வயதுக்கு மேற்பட்டோர் எனப் பல பிரிவுகளில் 40 இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குபற்றின.

பின்னர், அல்ட்ரா நிறுவனத்தின் தவிசாளர் உனைஸ் தலைமையில் பரிசளிப்பு இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம். எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டார்.




காத்தான்குடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஹக்கீம், காத்தான்குடி நகர சபை முன்னாள் தவிசாளர் அஸ்பர், காத்தான்குடி மத்திய கல்லூரி அதிபர் நிஹால் அஹமட், காத்தான்குடி பட்மின்டன் கழகத் தலைவர் டாக்டர் மாஹீர், செயலாளர் எம்.எச்.எம் நிஸ்பர், கழக உறுப்பினர்கள் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.






# மன்னார் பிரீமியர் லீக் முடிவில் மோதல் காயமடைந்த இருவர் வைத்தியசாலையில்

## சம்பவம் முடிந்த பின் வந்த பொலிஸ் நின்றவர், போனவர்கள் மீது தடியடி

**(மன்னார் நிருபர்)**

மன்னார் பிரீமியர் லீக் உதைபந்தாட்ட இறுதிப்போட்டியின் முடிவில் ஏற்பட்ட பெரும் சண்டையில் காயமடைந்த 2 பேர் மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட உதைப்பந்தாட்ட லீக் ஏற்பாடு செய்த மன்னார் பிரீமியர் லீக் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று (3) மாலை - மன்னார் பள்ளி முனை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டி ஏ.கே.ஆர்.எவ்.சி. அணிக் கும் அயிலன் எவ்.சி. அணிக்கும் இடையில் இடம்பெற்றது.

இதன்போது அயிலன் எவ்.சி. அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

போட்டி முடிவடைந்த நிலையில் சில ருக்கிடையில் மைதானப் பகுதியில் மோதல் ஏற்பட்டது.

பின்னர் இது பாரிய மோதலாக மாறி, நீண்ட நேரத்தின் பின்னர் மோதல் தணிந்தது.

இந்த மோதலின் போது காயமடைந்த 2 பேர் மன்னார் மாவட்ட பொது வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், மைதானப் பகுதி யில் அமைதி நிலவிய நிலையில் பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்று, போட்டி யாளர்கள் மைதானத்தில் இருந்து வெளியேறினர்.

எனினும், போட்டியை ஏற்பாடு செய்த வர்கள் மற்றும் பள்ளி முனை கிராமத் தைச் சேர்ந்தவர்கள் எனப் பலர் மைதா னத்தைச் சூழ்ந்த பகுதிகளில் நின்றனர்.

இதன்போது மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் வந்த பொலிஸார் வீதியில் சென்றவர்கள் மற்றும் மைதான பகுதிகளில் நின்ற வர்களைத் தடிகளால் தாக்கினர் என அறிய முடிகின்றது.



